

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க கழகத்தின் சார்பாக புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு "இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஏற்பாட்டிலும் தலைமையிலும், முப்தி முஹம்மது, ரூஹுல் ஹக் ஹஜ்ரத் தலைவர் திருச்சி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை முன்னிலையில் நடைபெற்றது .

### எந்தெந்த தொகுதிகளில் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களைத் தெரிவிக்குமாறு

# அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது!

## பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, மார்ச் 31-

"எந்தெந்தத் தொகுதிகளில் பள்ளிகளுக்கான கட்டடங்களாக கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களைத் தெரிவிக்குமாறு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பப்படுகிறதென்றும் அதன்படி இதுவரை 144 உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது" என்று சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் நாகை ஜெ.முகம்மது ஷாநவாஸ் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில்களும் வருமாறு:-

**ஜெ.முகம்மது ஷாநவாஸ்:** நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊரட்சி ஒன்றியம், இலங்கடம்பனூர் உயர்நிலைப் பள்ளியில் ஆய்வகம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** உறுப்பினர் அவர்கள் கோரிய ஆய்வகக் கட்டடம், வருகின்ற 2025-2026 ஆம் கல்வியாண்டில் NABARD வங்கியின் மூலமாக பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகக் கட்டப்படும் என்பதைத் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**ஜெ.முகம்மது ஷாநவாஸ்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாகப்பட்டினம் தொகுதி, திரு மருகல் ஊராட்சி ஒன்றியம், கட்டுமாவடி ஊராட்சியில் அமைந்திருக்கிற புராக்கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வகம் தேவையென்ற கோரிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த ஆய்வகமும் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பள்ளிகளுக்கான பல்வேறு கட்டடங்களைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் நடந்து முடிந்த விருத்தாசலம் 'பெற்றோர்களைக் கொண்டாடுவோம்' மாநாட்டில் திறந்து வைத்த கணக்கோடு சேர்த்து சொல்வதென்றால், கிட்டத்தட்ட 8,121 வகுப்பறைகளைத் திறந்தது மட்டுமல்ல, 52 ஆய்வகங்களையும் திறந்து வைத்திருக்கிறார்கள். தற்போதும், 105 ஆய்வகங்களுக்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், உறுப்பினர் கேட்டது போன்று அனைத்து உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அந்தந்தத் தொகுதிகளில் என்னென்ன கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன, என்னென்ன கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன, மேலும் என்னென்ன கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன போன்ற தகவல்களைத் தெரிவிக்குமாறு அனைத்து உறுப்பினர்களுக்கும் நானே தனிப்பட்ட முறையில் கடிதம் அனுப்ப ஆரம்பித்திருக்கிறேன். கிட்டத்தட்ட 144 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நானே கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறேன். மீதமுள்ள உறுப்பினர்களுக்கும் இரண்டு நாட்களில் கடிதங்கள் அனுப்பப்படும்.

இந்த வருடத்தில் கேட்கப்படுகின்ற கோரிக்கைகள் அனைத்தும் வருகின்ற கல்வியாண்டில் கண்டிப்பாக படிப்படியாகக் கட்டித் தரப்படும். அவற்றில் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற ஆய்வகமும் கண்டிப்பாக இருக்கும்

**ஜெ.முகம்மது ஷாநவாஸ்:** இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரப்படும் என்று தெரிவித்த அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் எங்களுடைய பொறுப்பு அமைச்சராவார். எனவே, பொறுப்பான பதிலைத் தந்திருக்கிறார் என்ற மனநிறைவோடு, நாகப்பட்டனம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், கணபதிபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும், நாகப்பட்டினம் நகராட்சி, காடம்பாடி நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஏற்கெனவே நிதித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. அடுத்த வாரத்தில் joint meeting கூட்ட ப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 638 requests வரப்பெற்றுள்ளன. அவை வரைமுறைப்படுத்தப்பட்டு, எவ்வளவு பள்ளிக்கூடங்கள் வரையறைக்குள், விதிமுறைக்குட்பட்டு வருகின்றனவோ, கண்டிப்பாக அதிகபட்சமான பள்ளிக் கூடங்கள் தரம் உயர்த்துவதற்கான பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல் தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து ஊத்தங்கரை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் மூன்றம்பட்டி எஸ்.குமரேசன் தலைமையில் செயற்குழு உறுப்பினர் ஜே.கிருபாகரன் சிறப்புரையில் காரப்பட்டு பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பெண்களின் முழு பங்கேற்புடன் நடைபெற்றது. இதில் கழக உடன்பிறப்புகள் மாநில மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) , கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், மூத்த முன்னோடிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

### கூத்தூர் ஊராட்சி - பனமங்கலத்திலிருந்து செல்லும் சாலையை

# மண்ணச்சநல்லூர் - துறையூர் புறவழிச் சாலையுடன் இணைத்திடுக!

## சட்டப் பேரவையில் மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் பேச்சு!

சென்னை, மார்ச் 31-

சட்டப் பேரவையில் நகர்ப்புற வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையில் மண்ணச்சநல்லூர் தொகுதி உறுப்பினர் சீ.கதிரவன் பேசும்போது, கூத்தூர் ஊராட்சியில் பனமங்கலத்திலிருந்து செல்லும் சாலையை மண்ணச்சநல்லூர் - துறையூர் புற வழிச்சாலையுடன் இணைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் பேசியதாவது:-

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, இதே காலகட்டம். பதவியேற்புக்காக ஆளுநர் மாளிகையில் உச்சரிக்கப்பட்ட பெயர்தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நம் முதல்வர். இன்று ஒட்டுமொத்த நாடே இப்பெயரை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கு 22-3-2025-ல் தேசத் தலைவர்கள் சென்னையில் ஒன்றுகூடி, நம் தலைவருடன் ஆலோசித்த காட்சிகளே சாட்சி. மொழி, திணிப்பு, நிதி மறுப்பு, தொகுதிகள் மறுசீரமைப்பு என முத்தமிழ் வளர்த்த தமிழ்நாட்டை, முதுகில் குத்தப் பார்க்கும் ஒன்றிய அரசுக்கு எதிராக கொள்கைப் போர் பரணி பாடி, வாள் ஏந்தி நிற்கிறார் நம் தளபதி முதலமைச்சர் அவர்கள். திட்டங்களால் மக்களின் மனதை வென்று இளைஞர்களால் 'அப்பா' என்று அழைப்பதும் ஒருபுறம், கொள்கைகளுக்காக அணி திரட்டி எதிரிகளை 'அப்பப்பா' என ஓட விடுவது மறுபுறம் என ஆட்சியையும், கொள்கையையும் இரு கண்களாக பாவித்து, களமாடி வரும் நம் திராவிட மாடல் தலைவர் முதல்வர் அவர்களை வணங்கி, என் உரையைத் துவக்குகிறேன்.

**மனித நேயமிக்க அணுகுமுறை!**

கிரிக்கெட்டில் பல வகையான போட்டிகள் உண்டு. Test, ஒரு நாள், 20-20 போன்ற போட்டிகளில் எப்போதும் எல்லா வீரர்களும் ஆடுவதில்லை. கிரிக்கெட்டைப் போன்றதே அரசியல் ஆட்டத்திலும் பல வகையான போட்டிகள் உண்டு. ஆட்சி நிர்வாகம், கட்சிப் பணி, தொகுதிப் பணி என்று அனைத்திலும் அடித்து ஆடும் all rounder வீரர்தான் நம் இளைய சூரியன். அவருக்கு இடம் பார்த்து அடித்து விளையாடவும் தெரியும், களம் பார்த்து புகுந்து விளையாடவும் தெரியும். சேப்பாக்கம் மட்டுமல்ல, 234 சட்டமன்றத் தொகுதிகள் என அனைத்திலும் தனது மனிதநேய மிக்க அணுகுமுறையால், மனம் கவர்ந்த தலைவராகத் திகழும் நம் துணை முதல்வருக்கு வணக்கம்.

என்னை அறிஞர் பெருமக்கள், அனுபவம் வாய்ந்த சான்றோர்கள் நிறைந்த இந்த மாபெரும் அவையில் அமரச் செய்த, உழைப்பால் உயர்ந்த எனது தந்தையார், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர், தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர், எனது வாழ்வில் எல்லா வளங்களையும் எனக்களித்த உயர்திரு அ. சீனிவாசன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநாட்டை எத்தனை நாட்கள் நடத்துகிறோம் என்பது முக்கியமல்ல. அந்த மாநாடு ஏற்பாடுகளை எவ்வளவு சிறப்பாக எத்தனை மணி நேரத்தில் முடித்துத் தருகிறோம் என்பதுதான் முக்கியம். முதல்வரின் கண் அசைவில் முடித்துத் தருபவர் எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள். உலகமே நகர மயமாகி வரும் சூழலில், முக்கியத்துவம் வாய்ந்த, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொறுப்பை தனது மாநாடுகளின்போது போடப்படும் பந்தல்களைப் போன்று எழிலார்ந்த அழகுடன் கவனித்து வரும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திருச்சி (வடக்கு) மாவட்டச் செயலாளர் மற்றும் முசிறி சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி தியாகராஜன் அவர்களுக்கும், கழக ஒன்றியச் செயலாளர் K.K.R. சேகரன் அவர்களுக்கும், காட்டுகுளம் கணேசன் அவர்களுக்கும், ராமச்சந்திரன் அவர்களுக்கும், செந்தில்குமார் அவர்களுக்கும், சீனிவாச பெருமாள் அவர்களுக்கும், K.B.A. செந்தில் அவர்களுக்கும், நகர செயலாளர்கள் துரை ராஜசேகரன், மனோகரன் மற்றும் எனது தொகுதியைச் சார்ந்த 459 கிளைச் செயலாளர்கள், கழகத்தின் அனைத்து அணிகள் மற்றும் கழக உடன்பிறப்புகளுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தலைமை கொறடா அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என் தொகுதி மக்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சாலைகள் புதுப்பொலிவு பெறுகின்றன!**

இந்தியாவிலேயே நகர்ப்புற மக்கள் அதிகம் வசிக்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. அதாவது, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 48.45 சதவிகிதம் மக்கள் வசிப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இது தேசிய சராசரி அளவான 31 சதவிகிதத்தைவிட அதிகமாகும். தற்போது இதன் எண்ணிக்கை 53 சதவிகிதத்தைத் தாண்டியிருக்கும் என தகவல்கள் கூறுகின்றன. இதன் படி, தமிழ்நாட்டில் உள்ள 8 கோடிக்கும் அதிகமான மக்களில் பாதி பேர், அதாவது சுமார் 4 கோடிக்கும் கூடுதலான மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கிறார்கள். இதன் காரணமாகவே, நாம் பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும், நகராட்சிகளை மாநகராட்சிகளாகவும் தரமுயர்த்தி வருகிறோம்.

நகரமயமாக்குவதால் இன்றைக்கு குடிநீரும், கழிவு நீர் அகற்றும் பணிகளும் மிகப்பெரிய சவாலாக இருந்தாலும், அவற்றைத் திறம்படச் செய்துவருகிறது நம்முடைய திராவிட மாடல் அரசு. கடந்த காலங்களில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது அப்படியே சாலைகளைப் பெயர்த்து எடுத்துவிட்டு, சரிசெய்யாத நிலை இருந்து வந்தது. ஆனால், இன்றைக்கு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுடன் சாலை சீரமைப்புக்கும் சேர்த்தே நாம் நிதி ஒதுக்குவதால், திட்டங்கள் நிறைவடையும்போது சாலைகளும் சேர்ந்தே புதுப்பொலிவு பெறுகின்றன. இது திராவிட மாடல் அரசின் மக்கள் நலன்சார்ந்த அணுகுமுறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள். பேரூராட்சியில் உள்ள அனைத்துப் பணிகளும் ரூபாய் 70 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் பயன்பெற்றன. ஊரக வளர்ச்சித் துறையின் நிதியின்மூலமாக அனைத்துப் பணிகளுக்கும் ரூபாய் 97 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டில் பயன்பெற்றன. நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் பயன்பெற்றன. நீர்வளத் துறையின்மூலமாக ரூபாய் 41 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டில் பாசன வாய்க்கால் மற்றும் ஓடைகள் புனரமைக்கப்பட்டன.

**தொகுதி கோரிக்கை!**

பொதுப் பணித் துறையின் மூலமாக ரூபாய் 7 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

எனது தொகுதியின் முக்கிய கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

எனது தொகுதியில் பல ஆண்டுகளாக திருத்தலையூர் ஏரி, புலிவலம் ஏரி, T-புதுப்பட்டி ஏரி, திருத்தியமலை ஏரி, பெரமங்கலம் ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஏரிகளுக்கு காவிரி ஆற்றில் வெள்ளக் காலங்களில் வீணாகும் உபரி நீரை மின் மோட்டார் நீரேற்றம் மூலமாகவோ அல்லது பாசன வாய்க்கால் மூலமாகவோ திருத்தலையூர் ஏரியில் நிரப்பினால், சுற்றியுள்ள 55-க்கும் மேற்பட்ட கிராமங்களும், 5.25 இலட்சம் மக்களும் பயன்பெறுவதோடு, குடிநீர்த் தட்டுப்பாடும் இல்லாமல், நிலத்தடி நீர் மட்டமும் உயரும்; விவசாயமும் செழிப்புடன் இருக்கும். இதனால், மேற்கண்ட ஏரிகளை நிரப்புவதற்கு வழிவகை செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி நெ.1 டோல்கேட்-நாமக்கல் சாலை முக்கிய மாநில நெடுஞ்சாலையாக உள்ளது. தற்போது, திருச்சி நகருக்கு அரை வட்டச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதி, சுமார் 12 கி.மீ. நீளத்திற்கு, இச்சாலையில் வடபுறம் நெ.1 டோல்கேட் முதல் வாத்தலை வரை மற்றும் வாத்தலை முதல் முசிறி வரை இடையேயான நீளம் 15 கி.மீ. ஆகும். இச்சாலையில் தினந்தோறும் கனரக வாகனங்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்வதால், விபத்துக்கள் ஏற்பட்டவண்ணம் உள்ளன. எனவே, இந்த மீதமுள்ள 15 கி.மீ. நீளத்தை இணைத்து ஒரே சாலையாக மாற்றுப் பாதையாக Greenfield Alignment ஆக அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் 46 அரிசி ஆலைகள் மற்றும் குறு, சிறு தொழில்கள் செய்யும் மக்கள் அதிகம் உள்ளனர். அங்கு சீரான மின்சாரம் இல்லாமல், குறைந்த மின்ன முத்தம், மின்தடை மற்றும் மின்சாரப் பற்றாக்குறை போன்றவை ஏற்படுகின்றன. எனவே, குறைந்த மின்ன மூத்தம் மற்றும் மின்சாரப் பற்றாக்குறை போன்றவற்றை சரி செய்ய மண்ணச்சநல்லூரில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள கூத்தூர் ஊராட்சியில் பனமங்கலத்திலிருந்து செல்லும் புறவழிச் சாலையை மண்ணச்சநல்லூர்-துறையூர் புறவழிச் சாலையுடன் இணைத்தால், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள், அலுவலகம் செல்லும் மக்கள் உள்ளிட்டோர் பயன்பெறுவார்கள். மேற்கண்ட புறவழிச் சாலையை இணைத்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மண்ணச்சநல்லூர் தொகுதி, சா. கண்ணனூர் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட ஜீயபுரம், சமயபுரம், சிறுகனூர், கொள்ளிடம், ஜெம்புநாதபுரம், வாத்தலை மற்றும் புலிவலம் ஆகிய பகுதிகளிலுள்ள 7 காவல் நிலையங்களையும் இணைத்து மண்ணச்சநல்லூர் தொகுதிக்கென தனி துணைக் காவல் கண்காணிப்பாளர் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கைம்பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட சிறுமிகள், குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில், எனது மண்ணச்சநல்லூர் தொகுதிக்கு சேவை மையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாக்களித்தோருக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதோருக்கும் நன்மைகளைச் செய்யும் அரசாக இருப்போம் என்றார் நம் திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்கள். சொன்னதைச் செய்வோம் என்பதற்கு ஏற்ப, நான்கு ஆண்டு காலத்தில் மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதந்தோறும் ரூபாய் ஆயிரம், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் காலை உணவுத் திட்டம் என எண்ணற்ற திட்டங்களால் ஒவ்வொரு தமிழரும் மனம் நிறைந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் முதல்வரின் ஆட்சியில் ஒவ்வொரு நாளும் சாதனை நாளே. . .!

எங்கள் துணை முதல்வர் அவர்களுக்கு திரை உலகில் வேண்டுமானால், 'மாமன்னன்' கடைசிப் படமாக இருக்கலாம். இன்றைய 'இளைய மன்னன்' நீங்கள்; நாளைய 'தமிழ்நாட்டின் மாமன்னன்' நீங்கள்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) 2026 ஆம் ஆண்டு 234க்கு/234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று மகுடம் சூட்டுவோம். இந்தச் சிறப்புமிக்க பேரவையில் நான் பேசுவதற்கு நல்ல வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு சீ.கதிரவன் பேசினார்.



சேலம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில், 100 நாள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் தமிழகத்திற்கு தரவேண்டிய ரூ. 4,034 கோடியை ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்க கோரி மாவட்ட அவைத்தலைவர் ஜி.கே. சுபாசு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர். ரெயின்போ நடராஜன் முன்னிலை வகித்தார். பொதுக்குழு உறுப்பினர்கள். சா.சுப்பிரமணி. ஏ.ராஜேந்திரன் மற்றும் எம். குணசேகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தளவாய்ப்பட்டி ராஜா, கொண்டப்பநாய்க்கன்பட்டி ஊராட்சி தலைவர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.